# தமிழ் வளர்ச்சியில் சைவசமயச் சான்றோர்

முனைவர் தே.தேன்மொழி
உதவிப்பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை -117

41

**ஆய்வுச்சுருக்கம்**

சமயம் பேணுவதும் இறைநம்பிக்கையை ஏத்திப் போற்றுவதும் முதன்மை நோக்கம். அதனைச் செய்வதற்கான சிறந்த வழி தமிழ் போற்றுதல். தமிழ், இறை இரண்டும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. ஆலயங்களும் இறைவனும் வணங்கப்படும் காலம் வரை திருப்பதிகங்களில் தமிழ் வாழும்; தமிழ் வாழும் வரை இறைக்கோட்பாடு நிலைத்திருக்கும். தமது வாழ்நாள் உழைப்பை, சேர்த்த செல்வதை இறை நம்பிக்கையைக் காக்க அவர்கள் தத்தம் செய்திருக்கிறார்கள். நம் முன்னோரின் இந்த நம்பிக்கையை நமது தனிப்பெரும் அடையாளத்தை இனிவரும் தலைமுறைக்குக் கடத்த வேண்டிய பொறுப்பு தமிழராகிய நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே என்கிறார் திருமூலர். இத்தகைய சமயச் சான்றோர்களின் பணி தமிழ் வளர்ச்சியில் எங்ஙனம் இருந்தது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்** : சமயம், சான்றோர், சைவம், தமிழ், திருமுறைகள், நாயன்மார்கள்

**முன்னுரை**

களப்பிரர் காலத்திற்கு பிறகு சோழர் ஆட்சியில் கி.பி.7, 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் ஆலயப்பணியே ஆண்டவன் பணி என்ற சிந்தனை மக்களிடையே ஏற்பட்டது. சங்கஇலக்கியங்கள் காதலையும், அரசர்களின் வீரம் மற்றும் கொடையைப் பாடின, பக்திஇலக்கியங்கள்இறைவனையும் இறையடியாரையும் பாடின. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம், திருநீறில்லாத நெற்றிபாழ் என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றியது. இலக்கியங்களின் பாடுபொருள் பக்தி சார்ந்து தோன்றியது.

சங்க காலத்தில் நிலம்சார்ந்த வழிபாட்டு மரபுகள், சமணம், பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம் என ஆட்சிகளுக்கு ஏற்ப மாற்றம் பெற்றது. சமயங்களின் பரப்பும் கருவியாக சமய இலக்கியங்கள் தோன்றின. இலக்கியங்களில் நேரடியாகவும் உள்ளீடாகவும் சமயம் சார்ந்த சிந்தனைகள் எழுந்தன.

சைவ, வைணவ பக்திஇலக்கியங்கள் தமிழுக்கு அளித்துள்ள கொடைகள் அளப்பரியவை. அவற்றுள் சைவத்தைப் பொருத்தவரை காரைக்கால் அம்மையார் (மூன்றாம் நூற்றாண்டு) தொடங்கி சேக்கிழார் (12 ஆம் நூற்றாண்டு) வரை இருபத்தேழு அருளாளர்கள் வழங்கிய பன்னிரு திருமுறை சைவ சமயத்தின் கவசமாகவே கருதப்படுகிறது. மேலும் குமரகுருபரர்,தாயுமானவர், வள்ளலார், அருணகிரிநாதர் போன்றோரும் சைவத்தால் தமிழையும், தமிழால் சைவத்தையும் மேம்படுத்தியுள்ளனர்.

**தமிழ் மொழி**

ஒரு மொழி வளர்ந்து செழித்தோங்க கவிதை நயம் மட்டும் போதாது. அதன் எதுகை மோனை கொண்டு கவிதையும், கொச்சை மொழியில் இயல் என்ற பேச்சு வடிவு மட்டும் போதாது. அது படிப்பதற்குச் சுவையாக இருக்கலாம், ஆனால் அதன் உட்கருத்து யாரையும் ஈர்க்கும் தன்மை அற்றது. அதன் வளர்ச்சி அதனால் மக்களுக்கு கிடைக்கும் போதனை அதனைக் கொண்டு மக்களைக் கவரும் இனிய இசை அதன் பிரதிபலிப்பு. இதனால்தான் அந்த மொழி சிறப்படையும், இதனைத்தான் செய்தார்கள் நம் சமயக் குறவர்கள் நால்வர் மற்றும் பன்னிரு திருமுறை சான்றோர்கள். அவர்கள் பாடிய தமிழ் இசைப்பாடல்கள் சமயத்தையும் அக, புற வாழ்விற்கு அறிவுரை கூறும் கருத்துக்களை பிரதி பலிக்க வேண்டும். அப்போதுதான் அம்மொழி செம்மொழியாக வளரும், எக்காலத்திலும் எவ்வினத்தவரையும் கவரும் தன்மை பெறும்.

நம் பண்டைய சமய இலக்கியங்களான பன்னிரு திருமுறைகளில் இல்லாத கருத்துக்களே இல்லை எனலாம், அக புற வாழ்விற்கும், மருத்துவம், மற்றும் இறைவழிக்கும் வழிவகை கூறும் வகையில் திருமுறைப் பாடல்கள் அமைந்துள்ளன.. அந்த வகையில் பன்னிரு திருமுறைகள் சைவ மதத்தை பரப்ப , வளர்க்க தோன்றியதாக இருந்தாலும் அதற்கு முழு வலுவூட்ட பயன் பட்டது தமிழ் மொழியாகும். இறைவழிபாட்டிற்கு இறைவேதங்கள் சமஸ்கிருத்தை அடிப்படையாக பயன்படுத்திய காலத்திலேயே தமிழை இறைவழிபாட்டிற்கு முதன்மை படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழையே கடைப்பிடித்தனர் நம் சைவ சான்றோர்கள். இதனால் பிற எதிர் மதங்களுடன் போட்டி போட்டு சைவ சமயம் வளர்ந்து நம் தமிழையும் வளர்த்து பெருமை பெற்றது.

**சமயச் சான்றோர்கள்**

சமயத்தை வளர்க்கும் சமய சான்றோர்கள் இறைவரை வசப்படுத்த இனிய இசையாலே முடியும் என்பதை உணர்ந்து இசையாலே இறைவனைக் கவர்ந்தார்கள். இந்த இசை சுருதியோடு கலந்து மனதைக் கவர அதற்கு உறுதுணையாக விளங்கியது தமிழ் மொழியே. எனவே சமய சான்றோர்கள் தமிழ் திருப்பாடல்களாக பாடி இறைவனை நேசித்து அவரை தன்பால் ஈர்த்தார்கள். இசை என்பது இசைப்பது ஒருவரது எண்ணங்களை கருத்துக்களை அறிவியலை மற்றொரு வருடைய கருத்தாகியஅறிவுடன் இசைவிப்பது. அறிவே இயற்றமிழ், அவ்வறிவை இசைப்பாடல்களால் மற்றவருக்கு இசைவிக்கும் பாடல்களே இசைத்தமிழ் பாடல்களாகும். நடிப்பால், மெய்பாட்டால், அறிவை புரிந்து கொள்வதற்கு இசைப்பாடல்களும், நாடகமும் துணைபுரிவன. இசைத்தமிழும் நாடக் தமிழும், இயலாகிய அறிவியலைத் தொல்காப்பியர் காலம் கி,மு. மூவாயிரம் முதல் இன்று வரை வளர்த்து வந்துள்ளது. அந்த பெருமை செந்தமிழ் நம் தமிழுக்கே பெருமை.

காமத்தை வளர்ப்பதே இசை என்ற சமணர்கள் வாதத்தையும் கடந்து நமது சைவ சமயாச்சாரியர்கள் இசைப்பாடல்களாலேயே சைவத்தை, சிவ பக்தியை வளர்த்தனர். இசையையும் நாடங்களையும் பயன்படுத்துவோரை பொறுத்து பயன்களும் விளையும் இக்கருத்தை தெளிக்க நீதி வெண்பா பாடல் ஒன்றில் அறியலாம்.

**“வல்லவர் பாற் கல்வி மதமா ணவம் போக்கும்**
**அல்லவர் பாற் கல்வி யவையாக்கும் ... நல்லிடத்தில்**
**யோகம் பயில்வார் உயர்ந்தோர் இழிந்தோர்கள்**
**போகம் பயில்வார் புரிந்து ...”.** நீதி வெண்பா

எனவே சைவர்கள் , சைவக் கருத்துக்களையும், தத்துவ அறிவியலையும் வளர்ப்பதற்கு தமிழோடு இசைக்கலையை பெரிதும் பயன் படுத்தியுள்ளார்கள். இந்த நிலை கி.பி.3ம் நூற்றாண்டு காரைக்கால் அம்மையார் காலத்திலிருந்தே தொடங்கியிருக்கிறது என்பதை அவர்தம் தமிழ் இசைப்பாடல்கள் நமக்கு முன் உதாரணமாக திகழ்கின்றன என்பதை அறியலாம்.கி.பி. ஏழாம் நூற்றண்டின் தொடக்கத்தில் நரசிம்ம வர்மன் காலத்தில் 24 பண்கள் வாயிலாக தேவாரமாகிய இசைத்தமிழை திரு ஞானசம்பந்தர் வளர்த்தார். கி,பி. 9ம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் வாழ்ந்த திருமாளிகைத்தேவர் முதல் சேதிராயர் ஈறாக திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆசிரியர்கள் ஒன்பதிமர், புறநீர்மை, காந்தாரம், சாளரபாணி,நட்டராகம், பஞ்சமம், இந்தளம் முதலிய ஆறு பண்களால் இசைத்தமிழைபுயம் இன்னுயிரான சைவத்தையும்வளர்த்தனர்.

இறைவனே ஏழிசையும், இசைப்பயாயும் இருக்கின்றான் என்பார் சுந்தரர், கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகவும், பண் ஒன்றை இசைபாடும் அடியார்கள் குடியாக திருபுள்ளிருக்குவேளூரில் இருப்பவன் என்று சம்பந்தரும் ” நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகி ( அபிராமி அந்தாதி பாடல் 49) என்று அபிராமி அம்மையை அபிராமி பட்டரும் போற்றி உள்ள திறத்தால் தமிழும் , இறையும், இசையும் இசைந்துள்ள பாங்கை நாம் நன்கு உணரலாம்.

**தமிழ் வளர்த்த சமயக்குறவர்கள்**

நம் தமிழ் மொழி கல்தோன்றி மண்தோன்றக்காலத்திலேயே தோன்றியது என பெருமை பெற்றுக் கொள்கிறோம். பண்டைக்காலத்திலேயே தமிழை வளர்த்த பெருமை சைவ மதத்திற்கும் உண்டு. சமயத்தை வளர்க்க ஒரு மொழி தேவை என்றாலும், அக்காலத்தில் வேதங்கள் யாவும் சமஸ்கிருதத்தில் இருந்தாலும் அதன் உள்பொருளை தமிழுடன் சைவ மதத்தை பரப்பிய நம் சமய குறவர்கள் மற்றும் சிவனாடியார்கள், மற்றும் பன்னிரு திருமுறை இயற்றிய ஆசிரியர்களின் பங்கு அளவிடக்கறியது. அவரகளின் சொல் நயம் இறைவனே வந்து அடியேடுத்துக் கொடுத்து தன்னையும், தமிழையும் பாடிய பாட்டுகள் அற்புத செயல்களை செய்தவை என்பதை யாவரும் அறிவர். அவர்களின் சமயத் தொண்டிற்கு தமிழ் உற்ற துணையாக இருந்தாலும், அவர்களால் தமிழ் இமலய வளர்ச்சி பெற்றதென்றால் மிகை ஆகாது என்பதை அறியமுடிகிறது.

தில்லையில் திருவாசகப் பாடல்களை மாணிக்க வாசகர் பாட தில்லை நடராஜ பெருமான் தன் கைப்பட ஓலைகளில் எழுதி வைத்துச் சென்ற ” **அழகிய சிற்றம்பல முடையான்** ” என்று இறைவனே எழுதி கைச்சாத்திட்ட திருவாசக ஏடு இன்றும் புதுச்சேரி அம்பலத்தாடி மடத்தில் பூசையில் உள்ளதை நாம் காணலாம். இறைவரால் எழுதப்பட்ட இந்த ஏடுகள் தமிழுக்கு இறைவர் தந்த மேன்மை. இறைவரையும் ஈர்க்கும் தன்மை தமிழுக்கு உண்டு. மேலும் இறைவர் திரு ஆலவாய் உடையான்

சொக்கநாதப் பெருமான் திருவிளையாடல் புராண வரலாற்றில் ஏழை தருமிக்கு உதவி செய்வதற்காக தானே பாடல் எழுதி தமிழ் சங்கத்தில் அரங்கேற்றியதும், பன்னிரு திருமுறைகளில் 9ம் திருமுறையில் , மதுரையில் தன்னை அனுதினமும் அன்புக்கடல் பாடலகளால் பாடும் பாணபத்திரர் என்ற பாடகருக்கு பொன்னும் பொருளும் கொடுத்து உதவி செய்வதற்கு தானே ஏழுதிய கவிதை மடல் " **மதிமலி புரசை** "என்று சேரமான் பெருமானுக்கு ஏழுதிய தமிழ் கவிதை பன்னிரு திருமுறைகளில் அவரின் தமிழ் மேல் கொண்ட அன்பு வெளிப்படும். எனவே தமிழ் வளர்த்த பெருமை மதுரை ஆலவாய் சுந்தரர் சொக்கநாதர் அவர்களின் பங்களிப்பும் உண்டு என்பதை உணரலாம்.

**சமயம் சார்ந்த இலக்கிய வளர்ச்சி**

சைவ, வைணவத்தில் அதிகமான சமயம் சார்ந்த தமிழ் இலக்கியங்கள் தோன்றின. காப்பியங்கள், சிற்றியலக்கியங்கள், பிள்ளைத்தமிழ், உலா, மடல், திருமுறைகள், கம்பராமாயணம், ம காபாரதம், பதினெண்கீழ்க்கணக்குநூல்கள், கிறித்தவக் இலக்கியங்கள், இஸ்லாமியப் இலக்கியங்கள், பௌத்த இலக்கியங்கள் சமணக் இலக்கியங்கள், எனப் பக்தி இலக்கிய மரபு வளர்ச்சி பெற்றது.

**பன்னிரு திருமுறைகள்**

சிவனை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயமான சைவசமயம் சார்ந்து எழுந்த இலக்கியங்கள் சைவ இலக்கியங்கள் எனப்படும். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிற்றிலக்கியம், பெருங்காப்பியம், எனப் பல சைவ இலக்கியங்கள் இயற்றப்பட்டன. கி.பி.650 காலப்பகுதி தொடங்கி, 550 ஆண்டு காலம் தமிழ்மொழியில் சைவ சமயமே செல்வாக்கு பெற்றது.

பன்னிரு திருமுறைகளாகிய செந்தமிழ் மந்திரங்கள் அளவிடற்ககரியன. செந்தமிழ் மந்திரங்கள் ஓதும் அடியவர்கள் மீது தீவினைகளால் வரும் துன்பங்கள் வாராது தடுப்பவன் சிவபெருமான் ஒருவரே. ஏனனின் அவனுக்கு தமிழ்மீது கொண்ட ஈர்ப்பு. திருஞானசம்பந்தரின் முதல் பாடலில் " தோடுடைய செவியன் " என்று ஆரம்பித்துதன் பெருமையை சிறப்பிக்கவும், சிவனடியார்களின் வரலாற்றை உணர்த்த எழுதப்பட்ட பெரியபுராணம் தந்த சேக்கிழார், தமிழக்கும், ஓம் என்ற பிராணவ மந்திரத்தையும் இணைத்து "உலகெலாம்" என முடித்து தமிழுக்கு பெருமை சேர்த்துள்ளதை நாம் காணலாம்.

தேவாரம் என்றாலே தே – ஆரம் தெய்வத்தன்மை கொண்ட பாமாலை கொண்டது என்னும் பொருள்பட அமையப்பட்டது. பன்னிரு திருமுறைகளில் 9வது திருமுறை செந்தமிழ் திருவிசைப்பா என்பதாகும். 10வது தமிழ் முறை இதுவே தமிழ் கூறும் மந்திரமும் தந்திரங்களும் வைதிக, வேதிக, மருத்துவ முறைகளை கூறும் நூல். தமிழ் மணம் கொண்டு தனிச் சிறப்பு பெற்றது. 12 வது திருமுறையான பெரியபுராணம் சிவனடியார்கள் வரலாற்றுடன், சோழவள நாட்டின் சிறப்பு மற்றும் செங்கோல் மாட்சி பற்றியும் தன் சீர் தமிழால்பாடியுள்ளார் சேக்கிழார் பெருமானார்.

சுந்தரர் செந்தமிழ் பாட மாண்டவன் ( அவிநாசியில் முதலை உண்ட பார்ப்பன சிறுவன்)

மீண்டான், எரிக்கப்பட்ட அங்கம் திருஞானசம்பந்தரின் பசுந்தமிழால் பூம்பாவைப் பெண்ணாக உருக்கொண்டு மீண்டு வந்தது. திருமறைக்காட்டில் பூட்டிய திருக்கோவில் கதவம் திறக்க திருநாவுக்கரசு நாயனார் செந்தமிழ் பாடித்திறக்கச் செய்தார். திறந்த திருக்கதவும் திருக்காப்பிடவும் திறக்கவும், ஆளுடைய பிள்ளையார் செந்தமிழ் மந்திரமாக செப்புகிறார். இவை யெல்லாம் கன்னித்தண்டமிழ்ச் சொல் என்று சிறப்பித்தமை யாகும். எனவே செந்தமிழ் மந்திரங்களை ஓதியும் படித்தும் பயன் பெற்றோர் பலர் உண்டு காணலாம்.

திரு ஞானசம்பந்தர் பெருமான் தன்னுடைய பதிகப்பாடல்கள் அத்தனையிலும் கடைசி பாடலில் தன்னுடைய பெயரையும் தமிழின் பெருமையுடன் இப்பாடல்கள் ஓது நலம் பெறும் முறையினை கூறுவார். உதாரணமாக சில வரிகளை காணலாம்.
திருவெண்காடு பதியத்தில்,

**“பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்திவை வல்லார்**
**மண்பொலிய வாழ்ந்தவர் வான் பொலியப்புகுவாரே”**
**”ஞான சம்பந்தன் செந்தமிழ் சொல வலாரவர் தொல்வினை தீருமே”**
**” ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே”**
**“வண்தமிழ் கொண்டு இன்பமர வல்லார்கள் எய்துவர்கள் ஈசனையே ”**
**” சூலப்படையானை சொன்ன தமிழ்மாலை கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே”**
**” தண்டமிழ் கொண்டிவை ஏத்த சாரகிலா வினை தானே”**
**“அற்றமிழ் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து உற்றன வல்லவர் உம்பராவரே.” இதேபோல் சுந்தரர் தன் பாடலில்,**
**” நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார் நன்னெறி உலகெய்துவர்தாமே.”**

இது போன்று தமிழ் பெருமை பெற தமிழ் தேவாரப் பாடல்கள், திருமுறைப்பாடல்களால் தமிழ் வளர்ந்தது என்பது நமக்கு தெளிந்த நீர் போல் காணமுடிகிறது. பண்டைத் தமிழகத்தில் இலக்கியங்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பொற்றாமரைக் குளத்தில் விடப்பட்டு, அந்த ஏட்டினை இறைவன் கரை சேர்த்ததால் ஏற்றுக்கொண்டதாக செவிவழிச் செய்திகள் இருக்கின்றன.

தமிழகம் பல்லாயிரம் ஆலயங்களைக் கொண்ட ஆன்மிக பூமியாக சிறந்திருந்தது. இந்த ஆலயங்களின் இறைவன் தமிழால் பாடப்பெறும் பொழுது இன்னும் சிறப்பு அந்த இறைவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பாடல் பெற்ற தலங்கள் "திரு' என்ற அடைமொழியோடு பெருமை பெறுகின்றன. உதாரணமாக, "திருவாலாங்காடு', "திருமழிசை', "திருவல்லம்' என்று நூற்றுக்கணக்கான ஊர்கள் இருக்கின்றன.

சைவசமயத்தைப் பார்த்தால் தேவாரம் பாடிய மூவருமே தமிழுக்குத் தந்துள்ள முக்கியத்துவத்தை மூவர் பாடிய தேவாரத் திருமுறைகள் உணர்த்துகின்றன. திருஞானசம்பந்தர் தன்னை, "தமிழ் விரகன்', "அருந்தமிழ் ஞானசம்பந்தன்', "முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்', "நல்ல செந்தமிழ் வல்லவன்'

என்றெல்லாம் தன்னுடைய பாடல்களில் பெருமிதத்தோடு அடையாளப்படுத்திக் கொள்கிறார். இவரைப் போல தமிழ் மொழியை அடைமொழியாகத் தனக்கு வைத்துக் கொண்டவர் வேறு எவரும் இலர். அதேபோல், திருநாவுக்கரசு சுவாமிகளும் இறைவன் மீது தான் கொண்ட பக்தியை, தமிழ் மீது ஏற்றியே கூறுகிறார். "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று பாடி வைத்திருக்கிறார். சர்வ வல்லமை பொருந்திய மன்னரையும் எதிர்த்து நின்ற நாவுக்கரசருக்கு, தமிழ் இறைவனை அடைவதற்கான வழியாகத் தெரிந்திருக்கிறது.

சுந்தரரின் தமிழ் கேட்க இறைவன் அவருக்காகக் காதல் தூது போனதாகச் செய்தி இருக்கிறது. சேக்கிழார் தனது பெரியபுராணத்தில், இறைவன் சுந்தரரை ஆட்கொண்டு சிவநெறியைப் பரப்ப அவருக்கு ஆணையிட்டபோது, "மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று ஆணையிட்டதாக சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

**”அருநெறியமறை வல்ல முனியகன்பொய்கை அலர் மேய**
**பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை**
**ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரைசெய்த**
**திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே”**

என்று திருஞான சம்பந்தர் தனது முதல் பதிகத்திலேயே தமிழைப் போற்றத் தொடங்குகிறார். அதனால்தான், **"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'** என்று கொண்டாடப்படுகிறார். இந்தத் தமிழ் வளர்த்த திருமுறைகளை பேணிக் காப்பதிலும் அதன் வழியே தமிழை வளர்ப்பதிலும் ஆதீனங்கள் பெரும் பங்காற்றுகின்றன. தருமபுர ஆதீனத்தின் கொள்கை வாசகமே "சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக' என்பதுதான். அதற்கேற்ப தெய்விகத் தமிழ் வளர்ப்பதில் ஆதீனம் பெரும் அக்கறை காட்டுகிறது.

**தமிழ் மொழியின் பங்களிப்பு**

தகவல் பரிமாற்றத்திற்கு மொழி அவசியம். மனிதன் தோன்றிய காலம் முதலே மொழி எனும் கருவி நடைமுறையில் இருந்தது. மனித உறவுக்கு ஒரு பாலமாக அமைவது மொழி ஆகும். ஒரு சமுதாயத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, இலக்கியம் போன்ற அனைத்தும் மொழியைச் சார்ந்தே அமைகிறது. உயிருக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவதற்கு மொழி அவசியம் தேவைப்படுகிறது.

சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது தமிழ்மொழியும் சமஸ்கிருதமும் ஆகும். தமிழ் அறிஞர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி இதுபற்றிக் கூறுகையில், “தமிழும் சமற்கிருதமும் இந்திய பண்பாட்டின் இரு தூண்கள்’ எனத் தனது ஆழ்ந்த அனுபவத்தின் முதிர்ச்சியால் தெரிவிக்கிறார்.

தமிழும், வடமொழியும் கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் தமிழாராய்ச்சி அறிஞர் க.வெள்ளைவாரணனார்______தெரிவிக்கிறார்.

**‘மன்னுமா மலை மகேந்திர மதனிற்**
**சொன்ன வாகமந் தோற்று வித்தருளியும்’**

எனும் திருவாசக வரிகள் மூலம் தமிழ்மொழியின் இலக்கணத்தைச் சிவபெருமான் முதன்முதலில் அகத்திய மாமுனிக்கு உபதேசித்தார் என்பதை அறியலாம். மேலைநாட்டு மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீன மொழிகளுக்கு நிகரான பழமையும், சிறப்பும் தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. "**கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி….**' என்கிற சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு. சைவ சமயம் தழைக்க அரும்பாடுபட்ட சமய அருளாளர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருமூலர், சேக்கிழார், அருணகிரிநாதர், குமரகுருபரர், இராமலிங்க அடிகளார் மற்றும் பல சிவனடியார்களின் வழிவழியாக வந்து இறைவன் மீது தெய்வத் தமிழால் பாடியருளினார்கள்.

சுந்தரர், "**இறைவன் தமிழை ஒத்தவன்**' என்றும், நாவுக்கரசர், "**பண்ணின் இன்மொழி கேட்கும் பரமன்**' என்றும், "**தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'** என்றும், சேக்கிழார் "**ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்**' என்றும் இறைவனைத் தமிழாகவே போற்றியுள்ளார்கள். தமிழில் சைவ சமயத்தின் தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர்கள் திருஞான சம்பந்தர் முதல் சேக்கிழார் வரை உள்ள சமயக்குரவர்கள் ஆவர். அவை பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப் பெற்று தொகுக்கப் பெற்றன. இவற்றை "பன்னிரு திருமுறை' என அழைப்பர். இவை முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப் பெற்றன.

**"தோடுடைய செவியன் விடையேறியோர்தூ வெண்மதிசூடிக்**
**காடுடைய கடலைந் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த**
**பீடுடைய பிரமா புரமேவிய பெம்மாள் இவனன்றே!"**

என்று தொடங்கும் முதலாம் திருமுறை (1469 பாடல்கள்), இரண்டாம் திருமுறை (1331 பாடல்கள்), மூன்றாம் திருமுறை (1358 பாடல்கள்), யாவும் திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்கள் ஆகும். நான்காம் திருமுறை (1070 பாடல்கள்), ஐந்தாம் திருமுறை (1015 பாடல்கள்) மற்றும் ஆறாம் திருமுறை (981 பாடல்கள்) அனைத்தும் திருநாவுக்கரசர் அருளிய தேவார பாடல்கள் ஆகும்.

**"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால்**
**வெண்ணெய்நல்லூ ரருட்டுறையுள்**
**அத்தா உனக் காளாய்இனி அல்லேன் எனலாமே!"**

என்று தொடங்கும் ஏழாம் திருமுறை (1025 பாடல்கள்) சுந்தரர் அருளிய தேவாரப் பாடல்கள் ஆகும். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருகோவையார் ஆகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை; பத்தாம் திருமுறை திருமூலரின் திருமந்திரம்; பதினோராந்

திருமுறை திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் போன்றோர் முதல் நம்பியாண்டார் நம்பி வரை பன்னிருவர் பாடிய திருப்பாடல்கள்; பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் பெருமான் அருளிய "திருத்தொண்டர் புராணம்'; 12 திருமுறைகளில் சுமார் 18 ஆயிரம் பாடல்கள் உள்ளன. அவை இறைவனை அடையச் செய்யும் தோத்திரப் பாடல்கள் ஆகும். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம்,சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம் மற்றும் சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கு சாத்திர நூல்கள் சைவ இறை நெறியை உணர்த்தும் நூல்கள் ஆகும்.

**முடிவுரை**

தமிழைப் போற்றி, தமிழ் வழியே சைவ சமயத்தைப் பரப்பச் செய்த தவச் சான்றோர்களால் செந்தமிழும் வளர்ந்தது; சிவநெறியும் வளர்ந்தது. இவ்வாறு உயர்தனிச் செம்மொழியாகிய தமிழும், சைவமும் சிறப்புடன் பொலிவு பெற சைவச் சான்றோர்கள் பலர் பாடுபட்டுள்ளனர். தமிழர்கள் சைவத்தையும், தமிழையும் இரு விழிகளாய்ப் போற்றிக் காத்து வருகிறார்கள். சனாதன தர்மம் எனும் இந்து மதத்தின் உயிர்நாடியாகச் சைவசமயம் விளங்குவது போலச் சைவசமயத்தின் உயிர்நாடியாகச் செந்தமிழ் விளங்குகிறது. கிறித்தவர்களுக்கு பைபிள் புனித நூல் (Holy Book) போல, இசுலாமியர்களுக்குத் திருக்குர் ஆன் புனிதநூல் போல, சைவர்களுக்குச் சமயக்குரவர் அருளிய தேவாரம் புனித நூல் என்றே கூறலாம்.

**துணை நின்ற நூல்கள்**

1) சைவமும் தமிழும், பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி. டி. கே. சாலை, சென்னை – 600018, (2001).

2) சுப்பிரமணிய பாரதியார் : பாரதியார் கவிதைகள் (எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை வெளியீடு.

3) பத்மநாதன்.சி (2013). இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். LIS. 1-20.

4) ராசமாணிக்கனார். எம். (2002). பெரியபுராணம் ஆராய்செய் [பெரிய புராணம் பற்றிய ஆய்வு]. சென்னை: அலமு பதிப்பகம்,

5) கே.சுந்தரமூர்த்தி,சேக்கிழார் திருத்தொண்டர் புராணம். மயிலாடுதுறை: ஞானசம்பந்தம் வெளியீடு.2014.

6) http://www.tamilvu.org.